08.04.2026

அ.வ.எண். 383/2017

பி.சா.1 – திரு.செந்தில்குமார், த/பெ. பரமசிவம்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 08.04.2026 is accordance with the provision of Act X of 3331

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். வழக்கு சொத்து ஆதியில் குழந்தை கவுண்டருக்கு பாத்தியம் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் மூலமாக குழந்தை கவுண்டர் தனது இரு மகன்களான ராமன கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டர் இருவருக்கும் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தலா ஏக்கர் 6.45 சென்ட் பூமியை பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலமாக பாகம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

2. நான் B.A படித்துள்ளேன். நான் சிமெண்ட் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். வழக்கு சொத்து சம்மந்தமாக இனிமேல் எதிர்காலத்தில் எந்தவிதமான பின்தொடர்ச்சியும் கிடையாது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமன கவுண்டர் பெயரில் தற்போதும் சொத்து உள்ளது என்றால் இல்லை. ராமன கவுண்டர் இறந்துவிட்டார். ராமன கவுண்டருக்கு இரு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளார். ஆண் வாரிசுகளை எங்களுக்கு தெரியும், பெண் வாரிசை பற்றி தெரியாது. எனக்கு தற்போது 41வயதாகிறது.

3. ராமன கவுண்டருக்கு பெண் வாரிசு உள்ளார் என்பது தெரியும். ராமன கவுண்டரின் முதல் மகன் கருப்புசாமியின் மகள் 2ம் பிரதிவாதி பத்மாவதியின் மகன் நான் ஆவேன். 1ம் பிரதிவாதி வெள்ளையம்மாள், கருப்புசாமியின் 2ம் மனைவி ஆவார். கருப்புசாமியின் முதல் மனைவி சுப்புலட்சுமியின் வாரிசு தான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வெள்ளையம்மாள் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியான என் தாயார் அவரது தகப்பன் வழி கூட்டு குடும்ப சொத்திற்காக வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

4. என் அம்மா அவரது தாய்வழி சொத்தை பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. என் அம்மாவுக்கு அவரது தந்தை வழி கூட்டு குடும்ப சொத்தில் எவ்வாறு உரிமை உள்ளதோ அதேபோல் வாதியின் தாயாருக்கும், தனது கூட்டு குடும்ப சொத்தில் 1/3 பாகம் உரிமை உள்ளது என்றால் ஏற்கனவே வாய்மொழியாக சொத்தை கொடுத்துள்ளனர். பதிவு செய்யவில்லை. சாட்சி மீண்டும் சொத்தை விற்று அதற்குண்டான பணத்தை கொடுத்துள்ளனர் என சாட்சியம் அளிக்கிறார். எந்த சொத்தை விற்று பணம் கொடுக்கப்பட்டது என்றால் மொத்தம் ஏக்கர் 6.45 சென்ட்டில் ஒரு பகுதியை, ராமனகவுண்டர், ரங்காத்தாள் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார். ரங்காத்தாளுக்கு விற்ற பணத்தை தெய்வாத்தாளுக்கு(வாதியின் தாயார்) கொடுத்துள்ளனர்.

5. அவ்வாறு பணம் கொடுத்ததற்கான ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரங்காத்தாளுக்கு கிரயம் கொடுத்த பத்திரத்தில் யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் ராமனகவுண்டர் கையொப்பம் செய்துள்ளார். மற்றவர்கள் கையெழுத்து செய்துள்ளார்களா என்று தெரியாது. ராமனகவுண்டர், தனது மகள் தேவாத்தாள் இறக்கும்வரை எந்த சொத்துக்களையும், பணத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்துள்ளார்.

6. 1987 ம் ஆண்டில் ராமனகவுண்டர் மற்றும் அவரது ஆண்மக்களான கருப்புசாமி மற்றும் பழனிச்சாமி, ஆகியோர் ஒரு 3 ம் நபரான ரங்காத்தாள் என்பவருக்கு க.ச.எண்.618/1 ல் சரிபாதி வடபுறம், பு.ஏ.1.08, க.ச.எண்.623/1 நெம்பர் காலையில் தென்புறம் சரிபாதி 1.02 ½ மற்றும் க.ச.எண்.858/1 ல் 0.2 ½ ஆகிய கூட்டு குடும்ப சொத்தில் தங்களுக்கு உரிமைபட்ட சொத்தின் ஒரு பகுதியான ஏக்கர் 2.33 சென்ட் சொத்தை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிசா.ஆ.2 ரங்காத்தாள் கிரயம் பெற்ற பத்திரத்தில், ராமன கவுண்டர் அவரது ஆண் மக்களான கருப்புசாமி மற்றும் 5 ம் பிரதிவாதி பழனிச்சாமி கையொப்பம் செய்துள்ளனர் என்றும், அதில் வாதியின் தாயார் தேவாத்தாள் கையொப்பம் செய்யவில்லை என்றால் கருப்புசாமி மட்டும் கையொப்பம் செய்துள்ளார்.

7. கூட்டு குடும்ப சொத்தில் ராமன கவுண்டர் அவரது ஆண் மக்களான கருப்புசாமி மற்றும் 5 ம் பிரதிவாதி பழனிச்சாமி ஆகியோர் அவர்களுக்குரிய பாகத்தை மட்டும் விற்றுள்ளனர் என்றால் சரிதான். சொத்தை விற்பனை செய்யும்போது தேவாத்தாள் உயிருடன் இருந்தாரா என்பதை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை விற்பனை செய்தபோது, தெய்வாத்தாளுக்கு உரிய பங்கை வங்கியில் வைப்பீடு செய்திருக்க வேண்டும் என்றால் அது பற்றி தெரியாது. ரங்காத்தாளுக்கு கிரயம் கொடுத்த பணத்தில் தெய்வாத்தாளுக்கு கொடுத்துள்ளனர்.

8. பிரதிவாதிகள் தரப்பில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களுக்க ராமன கவுண்டரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழோ சார் பதிவளார் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது. ராமன கவுண்டரின் இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ராமன கவுண்டரின் வாரிசு சான்றிதழ் பெறப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. ஆவணம் பதிவு செய்யும்போது நபரின் கையொப்பம் அல்லது கைரேகை வைத்து தான் ஆவணம் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். நபர் இறப்பிற்கு பின்னிட்டு அவர் சொத்துக்கள் சம்மந்தமாக ஆவணம் ஏற்படுத்தும்போது மேற்படி நபரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் கொடுக்கப்பட்டால் மட்டுமே ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எவ்வாறு ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு தெரியாது.

9. ராமன கவுண்டர் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்களில் தற்போது வரை அவரது ஆண் மக்களின் பெயர் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது என்றும், அவரது பெண் வாரிசான தேவாத்தாள் பெயர் வேண்டுமென்றே சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. தேவாத்தாள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கருப்புசாமி மற்றும் பழனிச்சாமியின் பெயர் மட்டும் உள்ளது. தேவாத்தாள், ராமன கவுண்டரின் வாரிசா இல்லையா என்றால் வாரிசு தான். ராமன கவுண்டருக்கு இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் ஏன் வாங்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது. அவ்வாறு வாங்கியிருந்தால் அதில் வாதியின் தாயார் தெய்வாத்தாளின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கும் என்றும், வருவாய் துறை

ஆவணங்களிலும் அவர் வாரிசு என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்பதால், இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை என்றால் தெரியாது.

10. ராமன கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது ஆண் மக்கள் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளனரா என்றால் ஆமாம். தாவா சொத்தில் க.ச.எண்.616/1B , ராமன கவுண்டரின் மூத்த மகன் கருப்புசாமியின் பெயரிலேயே வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் கருப்புசாமி மற்றும் பழனிச்சாமி பெயரில் உள்ளது. பி.சா.ஆ.3 கிரய பத்திரத்தில், 5 ம் பிரதிவாதி பழனிச்சாமி பட்டா படி உரிமையில்லாத ராமன கவுண்டரின் மகன் கருப்புசாமிக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் க.ச.எண். 616/1B சொத்தின் பொதுவில் சரிபாதி என்று இந்த வழக்கில் 22 ம் பிரதிவாதி ரகுபதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் கருப்புசாமி மற்றும் பழனிச்சாமி பெயரில் உள்ளது.

11. பி.சா.ஆ.3 கிரய பத்திரத்தில், ராமன கவுண்டரின் சொத்தான க.ச.எண்.616/1B அவரின் இறப்பு சான்றிதழ் இல்லாமலேயே கருப்புசாமி மற்றும் 5 ம் பிரதிவாதி பழனிச்சாமி ஆகியோர் ஆவணம் ஏற்படுத்தியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்பது பற்றி தெரியாது. 22 ம் பிரதிவாதி ரகுபதி பி.சா.ஆ.4 ஆவணம் மூலமாக 18.07.2007 தேதியிட்ட ஒரு காலம் சென்ற ராதாமணி என்பவருக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்துள்ளார் என்றும், அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.5 07.03.2007 தேதியிட்ட கிரய பத்திரம், ஒரு பூபதிக்கு கிரயம் கொடுக்கப்பட்ட ஆவண சொத்து விவரத்தில், திருப்பூர் பதிவு மாவட்டம், சூலூர் துணைப்பதிவு மாவட்டம், பல்லடம் வட்டம், நீலாம்பூர் கிராமம், க.ச.எண்.617/1 காலையில் புல ஏக்கர்.2.53 க்கு தரம் ரூ.4.25 ல் இதில் வடபுறம் பாதி, ஏ.1.25 ½ சரிபாதி பு.ஏ.0.63 ¼ செண்ட் மேற்படி பூமியானது வடபுறம் என்று இருந்தாலும், அனுபவப்படியும், சட்டப்படியும் க.ச.எண்.617/1E, 1F என்று குறிப்பிடப்பட்டுள்ளது எவ்வாறு செல்லத்தக்கது என்றால் ஆரம்பத்தில் இருந்து அனுபவப்படி தான் உள்ளது.

12. வடபுறம் என்பது சரியானதா அல்லது தென்புறம் என்பது சரியானதா என்றால் அனுபவப்படி உள்ளதை கொடுத்துள்ளேன். பி.சா.ஆ.1 ஆவணத்தில், பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு அவரவர்கள் சொத்தை அவரவர்கள் அடைந்து

கொள்ள வேண்டியது என்றும், சொத்துக்கள் பொறுத்து பின் தொடர்ச்சியோ, அனுபவப்பாத்தியமோ இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பி.சா.ஆ.6 18.07.2007 தேதியிட்ட கிரய பத்திரத்தில், ராமன கவுண்டர் தனக்கு 1934 பாகசாசனத்தின் படி ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடுகளையும் செய்யாமல் காலமாகிவிட்டார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கருப்புசாமி பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பழனிச்சாமி மற்றும் தேவாத்தாள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றால் தெரியாது.

13. என்னுடைய அம்மா 9 ம் வகுப்பு படித்துள்ளார். அவருக்கு என்ன வயது என்றால் 65 வயது ஆகிறது. எனது அம்மாவுக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும். கருப்புசாமி எப்போது இறந்தார் என்றால் 2006 ல் இறந்தார். கருப்புசாமிக்கு இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளோமா என்றால் ஆமாம். ராமன கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. பி.சா.ஆ.6 கிரய பத்திரம் மற்றும் பி.சா.ஆ.7 பொது அதிகார ஆவணத்தில், 1934 ல் பாகம் செய்யப்பட்ட கூட்டு குடும்ப சொத்தில் பாகம் பிரிக்கப்படாத சொத்து என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. அதில், வாதியின் தாயார் தேவாத்தாளுக்கு உரிமை உள்ளது என்றால் இல்லை. ஏற்கனவே ரங்காத்தாளுக்கு விற்ற பூமிக்கு உண்டான பணம் கொடுத்துள்ளனர். என் அம்மா எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லியுள்ளார் என்றும், அது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. எதிர் வழக்குரையில் தேவாத்தாளுக்கு நிலம் ஒதுக்கப்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் இல்லை. பணமாக கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. கருப்புசாமி, 1ம் பிரதிவாதி வெள்ளையம்மாள், பத்மாவதி, பழனிச்சாமி ஆகியோர் மோசடியாக செய்த ஆவணங்களில் உள்ள சொத்துக்களை தவிர ராமன கவுண்டர் பெயரில் எவ்வளவு சொத்துக்கள் மீதம் உள்ளது என்றால் மோசடி கிரய ஆவணம் இல்லை. ராமன கவுண்டர் பெயரில் ஏக்கர் 1.26 ½ சென்ட் உள்ளது. அதில் பழனிச்சாமி(5 ம் பிரதிவாதி) பாதி சொத்தை பூபதி என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார்.

15. க.ச.எண்.617/1 காலையில் ஏக்கர் 1.26 ½ சென்ட் பூமியானது தற்போது வரை ராமன கவுண்டர் பெயரில் உள்ளது என்றால் இல்லை. கருப்புசாமி

மற்றும் பழனிச்சாமி பெயரில் உள்ளது. க.ச.எண்.616/1, 2, 3, 4, 5 ஆகிய உட்பிரிவில் உள்ள சொத்துக்களான 20 சென்ட் ராமன கவுண்டர் பெயரில் தான் உள்ளது என்றால் இல்லை. ராமன கவுண்டர் மற்றும் அவரது தம்பியின் பெயரில் உள்ளது. தம்பியின் பெயர் தெரியவில்லை. க.ச.எண்.617/1 மற்றும் க.ச.எண்.616/1, 2, 3, 4, 5 காலையில் ராமன கவுண்டர் தனது பெண் வாரிசான தேவாத்தாளுக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒதுக்கி வைத்திருந்த சொத்துக்கள் என்பதால் அது இன்றுவரை ராமன கவுண்டரின் பெயரில் உள்ளது என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur